REGD. No. M. 6311 ★ தனி இதழ் 1 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE : 55630

நம் நாடு

தி. மு. க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ✱ The official organ of the D.P.F.

மலர் 3] சென்னை: ஐப்பசி 5உ சனி (22—10—55) ★ ★ வெளியூர் : ஐப்பசி 6உ ஞாயிறு (23—10—55) [இதழ் 171

வட நாட்டில் மூக்குக் கண்ணாடி தொழிற்சாலை

கல்கத்தா, அக். 22—

மூக்குக் கண்ணாடிகள் உற்பத்தி செய்யும் பரீட்சார்த்தத் தொழிற்சாலை ஒன்று இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் இங்குள்ள மத்திய கண்ணாடி ஆராய்ச்சிக் கழகத்தால் துவக்கப்படும்.

இந்தியத் துணைக்கண்டத்திலேயே இது மாதிரி தொழிற்சாலை முதலாவதாகும்.

துவக்கத்தில் தொழிற்சாலை 5 முதல் 10 டன் வரை மூக்குக் கண்ணாடிகள் உற்பத்தி செய்யும் என்றும், பின்னால் இந்தியாவின் முழுத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் அளவுக்குத் தொழிற்சாலை

(4-ம் பக்கம் பார்க்க)

'அறிவு எங்கிருப்பினும் தேடிப் பெறுவோம்!'

'சிந்திக்காதவர் நம்மைச் சந்தேகிக்கின்றனர்!'

'அறிவை அலட்சியம் செய்யும் போக்கு வளரக்கூடாது'

சென்னையில் சிற்றரசு இலட்சிய விளக்கம்

"ஆயிரம் உயிர்களைப் பிணங்களாக்கி, அப்பிணங்களின் மேல் கல்லறை எழுப்பியாயினும், துடிக்கத் துடிக்க—இளைஞர்களின் குருதி கொட்டக் கொட்ட அவர்களின் குருதிக் குழாய்கள் துண்டிக்கப்பட்டாலும், நமது நாட்டின் சுதந்திரத்தை—திராவிட நாட்டின் சுதந்திர ஆட்சியை—அந்த ஆட்சியின் உயிர்நாடியை நமதாக்கிக் கொள்ள வேண்டுமென்று விரும்பும் நாம், எளிதில் ஏமாந்து விடப் போவதில்லை ; நிச்சயம் ஏமாறமாட்டோம்.

சாதிக்கும் காரியத்தில் தற்புகழ்ச்சி தேவையா ?

"'சிங்கத்தையும் வலைபோட்டுப் பிடிக்கலாம்; பெரிய யானையையும்கூட பொய்க் குழிவெட்டி ஆழ்த்திப் பிடித்துவிடலாம்; அதுபோலவே மனிதர்களையும் ஏமாற்றிவிடலாம்; அவ்வாறு ஏமாற்றி நமது காரியங்களைச் சாதித்துக்கொள்ளலாம்' என்று மேனாட்டு அறிஞன் ஒருவன் கூறியிருக்கிறான். தன்னைத்தானே மக்களிடத்தில் புகழ்ந்து கூறிக்கொள்வதாலேயே பொது மக்களை ஏமாற்றி விடவும் முடியும்; ஆனால், திராவிட முன்னேற்றக் கழகத்தவர் அப்படிப்பட்டவர்களல்ல; எங்களுக்குத் தற்புகழ்ச்சி தேவையில்லை; ஏனெனில், எங்களைப் பற்றி—எங்கள் கொள்கையைப் பற்றித் தீர்ப்புக் கூறவேண்டிய நீதிபதிகள் நாங்களல்ல—அவர்கள், பொது மக்கள் !

'குறை'களைக் கேட்காதவரிடம் 'குணம்' காணமுடியுமா?

"வெள்ளைக்காரன் இந்த நாட்டிற்கு எப்படி அன்னியன் என்று நாம் கருதினோமோ, அதுபோலவேதான் நேரு பண்டிதரும் நமக்கு—திராவிடருக்கு அன்னியர்தான் என்ற முடிவுக்கு வந்திருக்கிறோம் ; இப்போதல்ல—ஆண்டாண்டு காலத்திற்கு முன்னாலேயே !

"மார்ஷல் டிட்டோ, சூ-யென்-லாய், மா-சே-துங் போன்ற பெரும் பெரும் அரசியல் தலைவர்களையெல்லாம் சந்தித்துப் பேசும் ஆவலும், ஆற்றலும் கொண்ட நேரு பண்டிதர், தமிழ் நாட்டுக்கு அண்மையில் வந்திருந்தபோது, தமிழ் நாட்டிலுள்ள மாபெரும் மக்கள் இயக்கமான திராவிட முன்னேற்றக் கழகத்தின் முக்கிய பெருந் தலைவர் என்ற முறையில் அண்ணா அவர்களைச் சந்தித்து நமது குறைகளை—கோரிக்கைகளைக் கேட்டறிந்திருக்க வேண்டாமா ? அதைச் செய்யாதுவிடுத்த நேரு பண்டிதரிடம், அரசியல் துறையில் நல்லபல அரிய அரசியல் சந்தர்ப்பங்களை உருவாக்கும் திறனை எப்படிக் காண முடியும் ?

அறிவு எங்கிருப்பினும் அதனைப் பெறுவோம் !

"நமக்குத் தேவையானதெல்லாம் ஒன்றே ஒன்றுதான்—அதுதான் அறிவு; அந்த அறிவு நமக்கு மட்டுமல்ல—உலக மனித சமுதாயம் அத்தனைக்கும் தேவையான ஒரு பொதுச் சொத்தாகும் அது ; அப்படிப்பட்ட அந்தப் பொதுச் சொத்து எங்கே இருந்தாலும், எவரிடத்திலிருந்தாலும், நாம் பெற்றுக்கொள்வதில் தவறில்லை. அந்த அறிவு, ஐயரிடமோ, ஐயங்காரிடமோ அல்லது வேறெந்தப் பார்ப்பனரிடமிருந்தாலும் நாம் பெறுவதில் தவறில்லை; அதனால்தான் நாமும், பெரிய அறிவாளிகளான சூரியநாராயண சாஸ்திரியார் போன்ற பார்ப்பனரையும் பாராட்டுகிறோம்.

ஏழ்மையில் தோன்றும் அறிவின் எழுச்சி !

"அந்த அறிவு, பெரும்பாலும் எளிய வாழ்க்கையில் இருப்போர்களிடம் பெருமளவில் காணப்படுகிறது. அவ்வாறு எளிய வாழ்க்கையை மேற்கொள்ளும்போதுதான், சீரிய கருத்துக்கள் அவர்கள் மனதிலே எழுகின்றன. இத்தாலி நாட்டையே 25 ஆண்டு காலமாக—உலகிலேயே மற்றெவரையும்விட மிக அதிக காலமாக—சர்வாதிகாரம் செலுத்திவந்த முசோலினியை எடுத்துக்கொண்டால், அவன், தனது இளமைப் பருவத்தில் மிகுந்த எளிமையான வாழ்க்கையைத்தான் நடத்தியிருக்கிறதாகக் காண்கிறோம். கேவலம் ஒரு துண்டு ரொட்டிக்காகப் பிச்சை எடுப்பவன்போல் திரிந்ததாக

(தொடர்ச்சி 4-ம் பக்கம் பார்க்க.)

இலஞ்சப் பழக்கத்தை ஒழிக்க முயற்சி

மேற்கு பாகிஸ்தான் முதல் மந்திரி உறுதி

கராச்சி, அக். 20—

"சர்க்கார் அலுவலகங்களில் இலஞ்சப் பழக்கம் எந்த ரூபத்தில் நிலவினாலும், அதனை ஒழிக்க தீவிரமாக முயற்சிக்க வேண்டும்,"

என்று பெஷாவர் பிரிவு நிர்வாக அதிகாரி இலாகா தலைவர்களுக்கு சுற்றறிக்கை ஒன்று அனுப்பப்பட்டுள்ளது. அண்மையில் உருவாக்கப்பட்ட மேற்கு பாகிஸ்தான் மாநில மந்திரி சபையின் தலைவரான டாக்டர் கான்சாகிப், சர்க்கார் ஊழியரிடை நிலவும் இலஞ்சப் பழக்கத்தைக் கருவறுக்க உறுதி பூண்டிருக்கிறதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சர்க்கார் உத்தேசமல்ல!

"கோலார் தங்கவயலில், மதுவிலக்கை ரத்து செய்வது, சர்க்கார் உத்தேசமல்ல," என்று, மைசூர் சட்டசபையில், கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில், சுகாதார அமைச்சர் கூறியுள்ளார்.

மைசூர் முதலமைச்சர் அனுமந்தையா மீது கன்னடியர் 'தாக்குதல்'

இரண்டு கர்நாடக மாநிலங்கள் வேண்டுமாம்

மைசூர், அக். 21—

ஒரே கர்நாடக மாநிலம் அமைக்கவேண்டும் என்பதில் மைசூர் சட்ட சபைக் காங்கிரஸ் கட்சியில் பலத்த கருத்துவேறுபாடுகள் முளைத்திருக்கின்றனவாம்.

முதன் மந்திரி அனுமந்தையாவின் நீண்டகால ஆதரவாளர்களில் கூடச் சிலர், திட்டத்திற்கு எதிர்ப்புத் தெரிவிப்பதுடன் அவர் மீது தாக்குதல் நடத்தவும் துணிந்துள்ளனராம்.

கர்நாடக மாநிலம் அமைக்கும் விஷயம் குறித்து கட்சிக் கூட்டத்தில் விவாதம் நடைபெற்றதாயும், அப்போது முதன் மந்திரி மீது—அவர், உறுப்பினர்களுக்குச் சரியான வழி காட்டவில்லை எனக் குற்றம் சாட்டப்பட்டதாயும் கூறப்படுகிறது.

அனுமந்தையாவின் மந்திரி சபையிலேயே உள்ள மூவர், மைசூர் தனி மாநிலமாக அமைவதின் மூலம் இரண்டு கர்நாடக மாநிலங்கள் அமையவேண்டுமெனக் கோரியிருப்பது, எதிர்ப்பாளர்களின் கரங்களை வலுப்படுத்தியிருப்பதாகவும் கூறப்படுகிறது.

சட்டசபையில் உள்ள ஒரு பிரபல காங்கிரஸ் உறுப்பினர், இரண்டு கர்நாடக மாநிலம் வேண்டுமெனக் கோரும் உறுப்பினர்களின் கையொப்பங்களைத் திரட்டி, இந்தியப் பிரதமர் உட்பட தொடர்புடைய பலருக்கும் அனுப்ப ஏற்பாடு செய்திருப்பதாகத் தெரிகிறது.

கர்நாடக மாநில அமைப்புக் குறித்து இவர்களிடையே கருத்து வேறுபாடு இருப்பினும், பெல்லாரி மைசூருடன்தான் தொடர்ந்து இருக்க வேண்டுமென்பதில் இவர்கள் அனைவரும் ஒருமித்த கருத்து கொண்டவர்களாக இருக்கின்றனர் என்றும் தெரியவருகிறது.

இதற்கிடையில், முதன் மந்திரி அனுமந்தையா, டில்லியில் நடைபெறும் முதன் மந்திரிகள் மாநாட்டில் கலந்துகொள்வதற்காக டில்லிக்குப் புறப்பட்டுவிட்டாராம்.

நேருவின் வேண்டுகோள்: மராட்டியர் நிராகரிப்பு

'சம்யுக்த மராட்டியம் எங்களின் இலட்சியக் கனவு'

மராட்டிய காங்கிரசார் தீர்மானம்

பூனா, அக். 21—

பம்பாயைத் தலைநகராகக் கொண்ட சம்யுக்த மராட்டியம் வேண்டும் என்பது, மராட்டியரின் இலட்சியக்கனவு ; மராட்டியர் தங்கள் இலட்சியத்தை ஈடேற்றிக்கொள்ள இறுதிவரை போராடுவார் என்றும், பம்பாயைத் தனிமாநிலமாக ஆக்குவதை மராட்டியர் ஒரு போதும் ஏற்க முடியாது என்றும் மராட்டியப் பிரதேச காங்கிரஸ் குழுக் கூட்டத்தில் திட்ட வட்டமாகத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருப்பதின் மூலம், பண்டித நேருவும், இதரர்களும் விடுத்த வேண்டுகோளை மராட்டியர் முழுவதுமாக நிராகரித்திருக்கின்றனர்.

கூட்டத்தில் சங்கர்ராவ் தேவ், என். வி. காட்கில், பம்பாய் மந்திரிகள் மற்றும் பலர் கலந்துகொண்டிருக்கின்றனர்.

பம்பாய் நீங்கிய மராட்டியமும், மகா குஜராத்தும் தனித் தனி மாநிலங்களாக ஆக்கப்படலாம் என்றும், பம்பாய் தனி மாநிலமாக 5 ஆண்டுகளுக்கு இயங்குவது என்றும், பின்னர், விரும்பினால் மராட்டியத்துடன் சேர்ந்து கொள்ளலாம் என்றும் பண்டித நேரு, பண்டித பந்த், தேபர் ஆகிய மேலிடத்துத் தலைவர்கள், சங்கர்ராவ் தேவ் தலைமையில் சென்ற மராட்டியத் தூதுக் குழுவினரிடத்தில் டில்லியில் தெரிவித்தனர்.

ஆனால், இந்த வேண்டுகோளை ஏற்க மராட்டியத் தலைவர்களும், காங்கிரசாரும் மறுத்துவிட்டிருக்கின்றனர் ; நேரடியாக நிராகரித்திருக்கின்றனர்.

மேலிடத்தார் கூறிய யோசனைக்கு மாறாக, புதிய திட்டம் ஒன்றையும் மராட்டியத் தலைவர்கள் தெரிவித்திருக்கின்றனர்.

மராட்டியம், குஜராத்தி வழங்கும் எல்லாப் பகுதிகளும் அடங்கிய கூட்டு மாநிலம் அமைவது என்றும், 5 ஆண்டுகளுக்குப் பிறகு குஜராத்தியர் விரும்பினால், பம்பாய் நீங்கிய குஜராத்தி மாநிலம் அமைத்துக் கொள்ளலாம் என்றும் மராட்டியத் தலைவர்கள் யோசனை தெரிவித்திருக்கின்றனர்.

சம்யுக்த மராட்டியம் அமைப்பதற்காக, மராட்டியர் அனைவரும் சாதி, மத, கட்சி வேறுபாடின்றித் தியாகம் புரியத் தயங்கமாட்டார்கள் என்றும்கூட மாநாட்டில் பேசப்பட்டிருக்கிறது.

பம்பாய் மந்திரி சபையில் உள்ள மராட்டிய மந்திரிகள், இந்த இலட்சியத்திற்காக, எந்த நிமிடமும் பதவியினின்றும் விலகத் தயாராக இருப்பதாகவும் தெரிவித்திருக்கின்றனர்.

ரூ. 1,100 கோடி அந்நிய மூலதனம் தேவையாம் !

இந்தியாவின் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்துக்கு ரூ. 1,100 கோடி அந்நிய மூலதனம் தேவை என்று மதிப்பிடப்பட்டிருப்பதாக இந்திய திட்ட மந்திரி குல்சாரிலால் நந்தா கொழும்புத் திட்ட மாநாட்டுப் பிரதிநிதிகளிடையே கூறினார். மொத்தச் செலவில் இது கால் பங்குக்கு சற்று அதிகம் என்றும் அவர் குறிப்பிட்டார். எல்லா நாடுகளும் இத்துறையில் அதிக சிரத்தை காட்டும் என்று அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

ஆலைத் தொழிலாளர் வேலைநிறுத்தம்

ஜப்பானின் மிகப் பெரிய பத்து பருத்தி நூற்பு ஆலைகளைச் சேர்ந்த சுமார் 1,40,000 தொழிலாளர்கள், இன்று முதல் கால வரையறையின்றி வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டிருக்கின்றனர் என்று தெரியவருகிறது.

தொழிலாளர் 8 சதவிகிதம் சம்பள உயர்வு கோருவதாகக் கூறப்படுகிறது.

நம் நாடு
தி.மு.க. தினஇதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்
சென்னை 22—10—'55 சனி

அநியாய விலை!

"மனித சுபாவத்தின் உணர்வுக்கும், ஆற்றல்களுக்கும் இழிவும்—அழிவும் தேடித் தரத்தக்கது, அடிமைத்தனம்; மனிதப் பண்பிற்கு நேர்முரணான அந்த அடிமைத்தனம் நீடிக்க அனுமதிக்கக் கூடாது,"

என்று கூறினன், எட்மண்டு பர்க் என்ற ஆங்கில இலக்கிய வல்லுனன்.

எட்மண்டு பர்க் வர்ணிக்கிற கொடூர விளைவுகளைக் கொண்ட அடிமைத்தனத்தில், ஆப்பிரிக்காவில் உள்ள கென்யா நாட்டு மக்கள் அழுத்தப்பட்டுக்கிடக்கின்றனர். வெள்ளையர்கள், கென்யாவில் வாழும் சுமார் 50 இலட்சம் மக்களை அடிமை கொண்டிருக்கின்றனர்.

உலகின் எந்த ஒரு சிறு நிலப் பரப்பிலும், அரசியல் துறை அடிமைத்தனம் மட்டுமின்றி, பொருளாதாரம், சமுதாயம் போன்ற எந்தத் துறையிலும் அடிமைத்தனம் நிலவக் கூடாது என்பதை, 'வாழவிடு, வாழு,— தன்னைப் போல பிறரையும் எண்ணு'—என்ற உயர் கொள்கையை ஏற்றுக் கொண்டிருக்கிற நல்லறிவாளர் பலரும் வலியுறுத்தி வருகின்றனர்.

ஆனல் நாகரிகம் பெற்றவர்கள் என்று தங்களை விளம்பரம் செய்துகொள்ளும் மேலை நாட்டவர், பிறநாட்டு மக்களின் உணர்வுகளுக்கு—எண்ணங்களுக்கு மதிப்பளிக்க மறுப்பது, வேதனை தரக்கூடிய ஒன்றாகும்.

கென்யா மக்களை தாங்கள் அடிமை கொண்டிருக்கும் நிலையை தாங்களாகவே மாற்றிக் கொள்ளும் நாகரிக உள்ளத்தை வெள்ளையர் பெற்றிருக்கவில்லை. அதனுடைய விளைவுகள், எத்தனை கோரங்களை உண்டாக்கியுள்ளது என்பதை நினைக்கவே பயங்கரமாயிருக்கிறது.

கென்யா விடுதலைக்காக, அந்த நாட்டு மக்களில் தீவிரவாதிகளாயிருப்போர், தங்கள் விடுதலை இலட்சியத்தை நிறைவேற்றிக்கொள்வதற்காக பலாத்காரமான நடவடிக்கைகளில் ஈடுபடுவதாகக் குற்றம் சாட்டி, அவர்களை வேட்டையாடுகின்றனர், வெள்ளையர்.

விடுதலை கோரிய குற்றத்திற்காக இதுவரை பலிபீடத்தில் நிறுத்தப்பட்டோர் தொகை 10,800; சிறை வைக்கப்பட்டிருப்போர் 60,000 பேர்; ஏற்கனவே பல்லாயிரக்கணக்கானோர் சிறையிலிருந்து விடுவிக்கப்பட்டுவிட்டனர்.

50 இலட்சம் மக்கள்தொகையுள்ள ஒரு நாட்டின் விடுதலைக்காக, அந்த நாட்டவர், இதுவரையில் தந்துள்ள விலை, பல்லாயிரக்கணக்கான உயிர்கள் என்றால், அந்த விலை எத்தனை மிகையானது?

மூன்றாண்டுக் காலமாக, வெள்ளை இராணுவத்தினர் நாட்டில் நெருக்கடி நிலைப் பிரகடனம் செய்துகொண்டு, விடுதலை கோருவோர் தலைகளை கொய்தவண்ணமிருக்கின்றனர். இன்னும் பல்லாயிரவரைத் தேடி அலைகின்றனராம்—தங்களது கொலைத் தொழில் திறமையை மெருகேற்றுவதற்காக!

பயங்கரமான கோரயுத்தமே நடத்தியிருந்தாலன்னியில், இப்படிப் பல்லாயிரக் கணக்கானோர் பலியாகும் நிலை ஏற்பட்டிருக்க முடியாது.

தீவிரவாதிகளாயிருக்கும் 'மாவ்மாவ்' இயக்கத்தினர் மேற்கொள்ளும் நடவடிக்கைகளின் விளைவுகள்தான் இவை என்று கூறி, வெள்ளை ஆதிபத்தியக்காரர்கள், விடுதலை விரும்பிகளின் கண்டனத்திலிருந்து தப்பிவிட முடியாது.

'மாவ் மாவ்' இயக்கத்தவர், கென்யா விடுதலைக்காக மேற்கொண்ட நடவடிக்கைகள், பலாத்கார உருவம் கொண்டதாகக்கூட இருக்கலாம்; நாம், அது சரியா தவறா என்ற விவாதத்தில் ஈடுபடப்போவதில்லை; ஆனல், அவர்களின் நடவடிக்கைக்கு அடிப்படை, அவர்கள் அடிமைகளாக்கப் பட்டிருக்கின்றனர் என்பது!

'நீ, நிறத்தால் கறுப்பன்—நீக்ரோ! நான், நிறத்தால் வெள்ளையன்—ஆங்கிலேயன்! உனக்கு உன்னை ஆண்டுகொள்ளத் தெரியாது என்பதால் தான்—அந்த அரசு நாகரிகம் நீ அறியமாட்டாய் என்பதால் தான், நான் நாகரிகமறிந்தவன் உன்னை ஆள்கிறேன்,' என்று வெள்ளையர் திமிருடன் கூறுகின்றனர்.

'எங்களுக்கு, எங்களை ஆண்டுகொள்ளத் தெரியாது—என்று ஆங்லேயர் பேசுகின்றனரே, அந்த இழிவைத் துடைக்க, நாங்கள் வெள்ளையரைப் பழி வாங்கிக்கொள்வதைத் தவிர வேறு வழியில்லை' என்றே தீவிரவாதிகள் வாதிடுவர்.

'நாகரீகம் பெற்றவர்' என்று தங்களைக் கருதிடும் வெள்ளையருக்கு, பிறமக்களின்—அவர்கள் தங்களின் அடிமைகள் என்ற நிலை இருப்பதினலேயே—உணர்வுகளை, மதிக்க முடியவில்லை; அவர்களின் உள்ளத்தை ஊசிகொண்டு குத்தாமல் இருக்க முடியவில்லை.

அந்த மனிதப் பண்பு இல்லை என்றால், தங்களின் அடிமை நிலையை மாற்றுவதற்கு வெள்ளையரை வெட்டி வீழ்த்துவதைத் தவிர வேறு வழியில்லை என்று, உலகத்திலேயே மிகவும் பின்தங்கிய—நாகரிகம் அறியாது ஆக்கப்பட்டிருக்கிற நீக்ரோவ மக்கள் எண்ணுவது, 'முழுவதும் தவறுடையது' என்று தர்க்கரீதியாகக் கூறிட முடியாதே!

விடுதலை விரும்புவோர் ஏற்றுக்கொள்ளக்கூடிய எந்த ஒரு நியாயமான காரணமும், வெள்ளையர் ஆப்பிரிக்காவில் ஆட்சி செலுத்துவதற்கு ஆதாரமாகக் காட்டப்பட முடியாதே!

இவற்றையெல்லாம் வெள்ளையர்கள் உணர்ந்து, மனித வேட்டையில் ஈடுபடுவதை விட்டு, சிக்கலுக்குப் பரிகாரம் தேடுமுன், 'மனித இருதயம் தங்களுக்கு இருக்கின்றதா?' என்று பரிசோதித்துப் பார்த்துக்கொள்ள வேண்டும்.

'மாவ் மாவ்' இயக்கத்தினர் பலாத்காரவாதிகள் — என்று கூறிடுவதினலேயோ அல்லது, 'கென்யாவுக்கு அரசியல் சீர்திருத்தம்' என்று கூறி, சில போலி நடவடிக்கைகளை மேற்கொள்ளுவதினலேயோ, கென்யா மக்கள் கோரிக் கொண்டிருக்கிற விடுதலையை நீண்டகாலத்திற்கு வெள்ளையர் மறுத்துவிட முடியாது. ஏனெனில் அந்த விடுதலைக்காக அவர்கள் ஏற்கனவேயே, அநியாயமான விலை தந்துவிட்டனர்!

பிரிட்டன் தலையிடாதாம்

பம்பாய், அக். 20—

'கோவா பற்றி இந்தியாவுக்கும், போர்ச்சுகலுக்குமிடையே உள்ள தகராறில் பிரிட்டன் இப்போது தலையிடுவதற்கில்லை,' என்று, காமன்வெல்த் உறவுகளுக்கான பிரிட்டிஷ் மந்திரி தெரிவித்திருக்கிறார்.

'தகராறை தீர்த்துவைக்குமாறு பிரிட்டன் இதுவரை அழைக்கப் படவில்லை; மேலும், அந்தச் சிக்கல், இந்தியா—போர்ச்சுகல் ஆகிய இரு நாடுகளாலும் தீர்த்துக் கொள்ளப்பட வேண்டும் என்பதே பிரிட்டன் கொள்கை' என்றும் அவர் தெரிவித்திருக்கிறார்.

'பரந்த அறிவு பெற்றவர்களாக இருக்க வேண்டும்'

"இந்த உலகத்தில் வெவ்வேறு துறைகளில், ஏராளமான நிபுணர்கள் உள்ளனர்; உதாரணமாக, பல எஞ்சினீயர்கள் இருக்கின்றனர்; நிபுணத்துவம் அடைந்துள்ள தங்களின் பிரச்சினையைத் தவிர, வேறு எதுவும் அவர்களுக்குத் தெரியாது. அவர்களை நான் பழிப்பதாக அர்த்தம் செய்துகொள்ளக்கூடாது. ஒருவர் சிறந்த எஞ்சினீயராக இருக்கலாம்—அல்லது, ஒரு சிறந்த டாக்டராக இருக்கலாம்; ஆனல், அவர்கள், தங்களுக்குத் தெரிந்ததை மட்டும் அறிந்தால் போதாது — அவர்கள், நல்ல குடிமக்களாகவும் இருக்க முடியாது; அவர்கள், பரந்த அறிவு பெற்றிருக்க வேண்டும்,"

என்று, பிரதமர் நேரு, புதுடில்லியில் நடைபெற்ற நூல் நிலையங்களின் வளர்ச்சி பற்றிய சர்வதேச விவாத அரங்கில் கூறியுள்ளார்.

இந்தியாவெங்கும் மதுவிலக்கு அமுல்

சிபாரிசுபடி செய்ய இயலாது

காங்கிரஸ் பொதுச் செயலாளரான ஸ்ரீமந்நாராயண் தலைமையில் நியமிக்கப்பட்ட மதுவிலக்கு விசாரணைக் குழுவினர், திட்டக் குழுவிடம் தாக்கல் செய்துள்ள அறிக்கை அடுத்த வாரம் வெளியிடப்படும் என்று தெரியவருகிறது.

குழுவினர், இந்தியாவெங்கணும் வரும் 1958-ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் முதல் மதுவிலக்கு அமுல் செய்யப்பட வேண்டும் என்று சிபாரிசு செய்துள்ளனர்—என்ற செய்தி ஏற்கனவே வெளியாகியது.

ஆனல், மாநிலக் குழுவின் சிபாரிசுகள் அமுலாகி, புதிய மாநிலங்கள் உருவாகும்போது, இப்போது மது தடை செய்யப்படாத பகுதிகளில், மதுவிலக்கு அமுல் செய்வது கடினமாயிருக்கும் என்றும், எனவே, சிபாரிசுப்படி, இந்தியா முழுவதும் குறிப்பிட்ட தேதியில் மதுவிலக்கு அமுலுக்கு வருவது இயலாது என்று அதிகார வட்டாரங்கள் கருதுவதாகவும் கூறப்படுகிறது.

பெண்ணாறு அணைக்கட்டுத் திட்டம்

'எங்களைக் கலந்தாலோசிக்கவில்லை'

சென்னை மீது புதுவைத் தலைவர் குற்றச்சாட்டு

புதுவை, அக். 19—

"சாத்தனூரில் உள்ள பெண்ணாற்று நீரை அணை போட்டுத் தடுக்க சென்னை சர்க்கார் முடிவு செய்திருக்கின்றனர்; இதனல் பாகூர் வட்டத்தில் சுமார் 3,600 ஏகர் விளைநிலத்திற்குக் கிடைத்து வந்த நீர்ப்பாசன வசதி தடைப்படுகிறது; சென்னை சர்க்கார் பெண்ணாறு திட்டம் பற்றி முடிவு எடுக்கும் முன், புதுவை சர்க்காரைக் கலந்தாலோசிக்காதது வருந்தத்தக்கது.

"நாங்கள் கடந்த 200 ஆண்டு காலமாக, பெண்ணாற்று நீரை உபயோகிக்கும் உரிமையை அனுபவித்து வருகிறோம்; அந்த உரிமை இப்போது மறுக்கப்படுவது பெரும் பாபமாகும்"

என்று, புதுவை சட்டசபையின் தலைவரான ஆர். எல். புருஷோத்தம ரெட்டியார், பத்திரிகையாளரிடம் பேசுகையில் தெரிவித்திருக்கிறார்.

"30 ஆண்டுகளுக்கு முன்பு மேட்டூர் அணைக்கட்டு திட்டமிடப் பட்டபோது, அப்போதைய சென்னை சர்க்கார், புதுவை சர்க்காரைக் கலந்தாலோசித்தனர்; ஏனெனில், காவேரி நீரை காரைக்கால் பகுதி மக்கள் உபயோகித்து வந்தனர் என்பதால்! அதேபோல, இப்போதைய சர்க்கார், பெண்ணாற்றுத் திட்டம் பற்றி புதுவை சர்க்காரைக் கலந்தாலோசிக்காதது ஏன் என்பது தெரியவில்லை"

என்றும், புருஷோத்தம ரெட்டியார் தெரிவித்திருக்கிறார்.

இட்லரின் எலும்புக் கூடு!

ரஷ்யாவுக்கு எடுத்துச் செல்லப்பட்டதாகத் தகவல்

பிரண்ட்லண்ட் முகாம், அக். 20—இட்லரின் மெய்ப் பாதுகாப்புப் படையில் ஒரு அதிகாரியாயிருந்த கார்ல் ஷ்ரீடர் என்பார், கடந்த 1945 மே திங்களில் இட்லரின் எலும்புக் கூடுகளைத் தோண்டியெடுத்து, ரஷ்யர்கள் அவற்றை மாஸ்கோவிற்கு சோதனைக்காக எடுத்துச்சென்றனர் என்று தகவல் தந்திருக்கிறாராம்.

இவர் சமீப காலம் வரையில் யுத்தக் கைதியாக ரஷ்யாவில் சிறை வைக்கப்பட்டிருந்து விடுதலையானவர்.

இட்லர், ஈவா பிரான் ஆகியோரின் சடலங்களை எரிப்பதற்கு இட்லரின் சொந்தக் கார் நிலையத்திலிருந்து தானே 180 டின் பெட்ரோல் அனுப்பியதாகவும், 1945 ஏப்ரல் 30-ந் தேதியன்று இட்லர் தற்கொலை செய்துகொள்ளுவதற்கு முன்பு பெட்ரோல் வேண்டும் எனக் கேட்டிருந்ததாயும் தெரிவித்திருக்கிறார்.

எரிந்த அவர்கள் இருவரின் உடல்களையும், ரஷ்யர்கள் பெர்லின் அருகில் உள்ள பச எனுமிடத்திலிருந்த மருத்துவ மனையில் பரிசோதித்துப் பார்த்ததாயும், பின்னர் எலும்புக்கூட்டை மேலும் சோதனைக்காக ரஷ்யா எடுத்துச் சென்றதாயும் தன்னுடன் இருந்த ஜெர்மன் கைதிகள் தெரிவித்ததாக ஷ்ரீடர் தகவல் தந்திருக்கிறாராம்.

எப்படி உணர்த்துவது இவர்களுக்கு?

ஜீவா, அக். 20—

தாழ்த்தப்பட்டவர்களுக்கும் வேலை செய்ய வேண்டுமென்று கூறுவதை எதிர்த்து, இங்குள்ள முடிதிருத்தும் தொழிலாளர்கள் இன்று கடைகளை எல்லாம் மூடினராம்.

சில நாட்களுக்குமுன், ஒரு தொழிலாளி, தாழ்த்தப்பட்ட தோழர் ஒருவருக்கு முடிதிருத்த மறுத்ததற்காக அவர்மீது போலீசார் தீண்டாமை ஒழிப்புச் சட்டத்தின்கீழ் வழக்குத் தொடர்ந்தனராம் இதனைத் தொடர்ந்தே தொழிலாளர்கள் கடையடைப்புச் செய்திருக்கின்றனர்.

காஞ்சீபுரம் — வேலூர் இரயில் இணைப்பு

போக்குவரத்து நெருக்கடி குறையுமென நம்பிக்கை

புதுடில்லி, அக். 20—

தென் பிராந்திய இரயில்வேயில், வேலூருக்கும்— காஞ்சீபுரத்துக்கும் இடையே, 44 மைல் தூரத்துக்கு 'மீட்டர் கேஜ்' இரயில் பாதையொன்றை அமைப்பது சம்பந்தமாகப் 'போக்குவரத்து சர்வே' ஒன்றை மேற்கொள்ளுவதற்கு இரயில்வே போர்டு அனுமதியளித்திருக்கிறது.

வேலூருக்கும்—காஞ்சீபுரத்துக்கும் இடையே இரயில் இணைப்பு ஏற்படுவதால், அதன் பாதை மார்க்கத்தில் உள்ள போக்குவரத்து நெருக்கடி குறையுமென்றும், வட ஆற்காடு மாவட்டத்தின் தலைமைக் காரியாலயங்கள் அமைந்துள்ள வேலூருடன் நேரிடையான இணைப்பு ஒன்று ஏற்பட்டுவிடுமென்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

இரட்டையரின் யோகம்!

சாத்தூர், அக். 19—

உள்ளூர் மகப்பேறு விடுதி ஒன்றின் துவக்க விழாவிற்குத் தலைமை வகித்த வர்த்தகர் ஒருவர், விடுதியில் பிறக்கும் முதல் ஆண் குழந்தைக்கு தங்க சங்கிலி ஒன்று அன்பளிப்பதாக வாக்களித்தார்.

அந்த விடுதியை முதன் மந்திரி காமராசர் நேற்றைய தினம் திறந்து வைத்த சில மணிக்கெல்லாம், ஒரு கர்ப்பிணி பிரசவத்திற்காக அனுமதிக்கப்பட்டார்; அங்கு அவர் இரட்டைக் குழந்தைகளுக்குத் தாயானர்.

அந்த இரு குழந்தைகளும், ஆண் குழந்தைகளாயிருந்தமையால், பரிசளிக்க வாக்களித்த வர்த்தகர் இரண்டு சங்கிலிகள் அன்பளிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது.

தனது வாக்கைக் காப்பாற்றுவதற்காக, அவ்வாறே அவரும் இரு சங்கிலிகள் அளித்தாராம்!

அதிக வேகத்தில் பறக்கும் அமெரிக்க விமானம்

வாஷிங்டன், அக். 21—

பசிபிக் கடற்கரையில் வாஷிங்டன் மாநிலத்திலுள்ள சியாட்டிலிலிருந்து 2,340 மைல் தூரத்திலுள்ள இந்நகருக்கு 3 மணி 58 நிமிடங்களில் ஒரு 'போயிங்' ஜெட் விமானம் பறந்து வந்துள்ளது. மணி ஒன்றுக்கு சராசரி 592 மைல் பிரயாணம் செய்துள்ள இதன் வேகம், ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்துக்கு பிரயாணம் செய்யும் விமானத்தின் அதிக வேகமாகும்.

10 பிரயாணிகளையும், பல ஆராய்ச்சிக் கருவிகளையும் எடுத்துச் சென்ற இவ்விமானம், சுமார் 32,000 அடி முதல் 35,000 அடி உயரத்தில் பறந்ததாக விமானி குறிப்பிட்டார். இத்தகைய விமானத்தில் 125 பேர் பிரயாணம் செய்வர்.

'ஆபத்துக்களினின்றும் தமிழ் மொழி காப்பாற்றப்பட வேண்டும்'

'மாணவர்களின் ஆர்வம் அதற்குப் பயன்பட வேண்டும்'

மதுரை தியாகராசர் கல்லூரியில் தோழர் கண்ணதாசன்

18—10—55 மாலை, மதுரை அமெரிக்கன் கல்லூரித் திருவள்ளுவர் கழக ஆதரவில், தோழர் இளமாறன் தலைமையில் நடைபெற்ற சிறப்புக் கூட்டத்தில், தோழர் கண்ணதாசன் அவர்கள், "மொழி—நேற்று, இன்று, நாளை" என்பதுபற்றிப் பேசினார்; அதன் சுருக்கம், இங்கு தரப்படுகிறது :—.

"தமிழ் மொழி ஒன்றுதான் இயற்கை ஒலிகளை ஒட்டித் தன் எழுத்துக்களை வகுத்துக்கொண்டது. பழைய தமிழ் இலக்கியங்களில் தமிழ்ச் சொற்களைப் பார்க்குந்தோறும், தமிழ் மொழியின் தனித்தன்மை தெரியவருகிறது

தமிழில் வேற்று மொழிக் கலப்புக்குப் பின்வந்த காலத்திலே நாம் இருக்கிறோம்; இதனால், இன்றைய வழக்கில் உள்ள சொற்கள் சங்க காலச் சொற்களிலிருந்து முழுக்க முழுக்க மாறுபாடு அடைந்திருக்கின்றன. அதனால்தான், அகநானூறு புறநானூறு படிக்கின்றவர்கள், 'புரியவில்லையே' என்று வருத்தப்படுகிறார்கள். அந்தப் புரியாத சங்க இலக்கியங்கள்தான் தனித் தமிழ் இலக்கியங்களாகும்; அவற்றில் காணப்படும் பண்பாடுதான் தனித் தமிழ்ப் பண்பாடாகும்.

நாளடைவிலே மாற்றம் அடைந்து வந்திருக்கும் இலக்கியச் சொற்களை, கால வேறுபாடு கொண்டு கணக்கெடுத்துப் பார்த்தால், ஒரு வேற்று மொழியும், கலாச்சாரமும் தமிழை ஆட்கொண்டது தெரியவரும்.

சங்க இலக்கியங்கள் சொல்லுகிற நெறிகள், மனித வாழ்வுக்குத் தேவையான நீதிகளாக இருக்கக் காணுகின்றோம்

பிற்பட்டுத் தோன்றிய 'கம்ப இராமாயணம்'போன்ற இலக்கியங்கள் எளிய நடையில் அமைந்தன என்றால், அவற்றிலே மொழி அமைந்துள்ள மாற்றத்தோடு பண்பாடும் தலைகீழாக இருப்பதைக் காண்கிறோம்

ஒரு மொழி மீது வேறொரு மொழி ஆதிக்கம் கொள்ளும்போது அந்த மொழிக்கு உடன்பாடான கலாச்சாரமும் வந்து புகுந்து விடுகிறது. இப்படி நம்முடைய மொழியையும், பண்பாட்டையும் பிற்காலத்தில் வந்து புகுந்த மொழி கெடுத்து விட்டது.

இன்றைக்கும், சங்கம்—தமிழ்ச் சொல்லா, இலக்கியம் — தமிழ்ச் சொல்லா என்று ஆராய வேண்டிய நிலைமைக்கு தமிழ் உருக்குலைந்து போய்விட்டது. ஆங்கில மொழியிலோ, பிரெஞ்சு மொழியிலோ, அதுபோன்றதொரு சொல் ஆராய்ச்சியிலே இறங்குவதிலே தவறில்லை. காரணம், இவை, வலிய முன்வந்து சொற்களைக் கடன் வாங்கிய மொழிகளாகும் ஆனால் தமிழ் மொழி அவ்வாறல்ல; இயற்கையிலேயே எல்லாச் சொற்களையும் கொண்ட மொழி. அதனுடைய மூல வார்த்தைகளையே உருத் தெரியாமல் அடித்து, வடமொழிச் சொற்கள் புகுந்தன. இந்த நிலையில் குலைவுற்று இன்று காணப்படும் தமிழை, இன்னொரு மொழி ஆட்கொள்ள வருகிறது.

நாளை வரப்போகும் அந்த மொழி, தமிழுக்கு மூன்றும் படையெடுப்பாகும். முதலில், தமிழுக்கு இந்தி லிபி வடிவம் கொடுக்கப்பட்டு, இன்னும் இரண்டு நூற்றுண்டுகட்குப் பிறகு, 'தமிழரின் நாகரிகமே இந்தி கொடுத்த பிச்சைதான், என்றுநிவிடும். இந்தப் பயங்கரச் சூழ்நிலையிலிருந்து தமிழ் மொழி காப்பாற்றப்பட வேண்டும்.

இன்றைக்குத் தமிழ் மாணவர்களிடையே காணப்படும் இந்த ஆர்வம், மகிழ்ச்சி தரத்தக்கது. இந்த ஆர்வத்தை மேலும் வளர்த்து மாணவர்கள் தமிழ்த் தொண்டு புரியவேண்டும். தமிழாசிரியர்களோடு நல்ல உறவு கொள்ளவேண்டும். அதன் மூலம் மொழியும் நாகரிகமும் அழிந்துவிடாமல் தடுத்துக் காக்க முடியும்."

கிழக்கு கோதாவரியில் பழுப்பு நிலக்கரியாம்!

கிழக்குக் கோதாவரி மாவட்டத்தில் பழுப்பு நிலக்கரி படிவத்தைக் கண்டுபிடிப்பதில் ஈடுபட்டிருக்கும் ஆந்திர பல்கலைக் கழகக்குழுவினர், தாத்திபாகா கிராமத்தில் 40 அடி ஆழத்தில் உயர்தரமான பழுப்பு நிலக்கரிப் படிவத்தைக் கண்டுபிடித்திருக்கின்றனர்; பரிசோதனைகள் நடந்துகொண்டிருக்கின்றன.

பெரம்பூர் இரயில் பெட்டித் தொழிற்சாலையின் அமைப்பில் மொத்தம் சுமார் 8,000 டன் உருக்கும், 20,000 டன் சிமிட்டியும் உபயோகிக்கப்பட்டிருக்கின்றன; 12 மைல் நீளத்துக்கு இரயில்வே 'சைடிங்கு'களும் 15 மைல் நீளத்துக்கு தண்ணீர் சப்ளை குழாய்களும், 5.5 மைல் நீளத்துக்குப் பாதைகளும் அமைக்கப்பட்டிருக்கின்றன.

திராவிடச் செல்வம் பெற்றுத்தரும் டாலர்!

அதிகரிப்பதற்கு குழு நியமிக்கிறது இந்தியப் பேரரசு

புதுடில்லி, அக். 20—

அன்னிய நாட்டுச் செலாவணியைச் சம்பாதித்துக் கொடுக்கும் இரு முக்கிய பொருள்களான முந்திரி, மிளகு ஆகியவற்றின் ஏற்றுமதியை அதிகரிப்பதற்காகக் கோச்சியைத் தலைமை இடமாகக் கொண்டு ஒரு கௌன்சில் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

'ஏற்றுமதியை அதிகரிக்க வேண்டும்' என்ற தங்கள் திட்டப்படி, இந்திய சர்க்கார் நியமிக்கும் ஏற்றுமதி அதிகரிப்புக் கௌன்சில்களில் இது ஐந்தாவதாகும்.

முந்திரியும், மிளகும் கேரளக் கடற்கரைப் பகுதிகளிலிருந்து, முக்கியமாக அமெரிக்காவுக்கு ஏற்றுமதி செய்யப்படுவதால் இவைகளிரண்டும் — டாலர் சம்பாதித்துக் கொடுக்கும் பிரதானப் பொருள்களாக இருக்கின்றன.

மிளகை வாங்குவதில் சோவியத் யூனியனும் அவ்வப்போது அக்கறை காட்டி வந்திருக்கிறது; மிகப் பண்டைக் காலந்தொட்டே இந்த மிளகு வியாபாரம் நடந்து வந்திருக்கிறது; மிளகு, ஏலம், கிராம்பு போன்ற இந்த வாசனைச் சரக்குகளின் வியாபார நிமித்தமாகத்தான் மேல் நாட்டினர் இந்தியாவுக்குக் கடல் மார்க்கத்தைக் கண்டுபிடித்தனர்.

கடந்த உலக மகாயுத்தத்தின் போது இந்தோனேஷியாவிலிருந்து போக்கு வரத்து நின்று விட்டபடியால், மிளகின் விலை மிகவும் உயர்ந்துவிட்டது. யுத்தத்துக்குப் பிறகு இந்தோனேஷியாவிலும், சராவக்கிலும் மிளகு சாகுபடி புதிதாக அதிகரிக்கப்பட்டிருக்கிறது; இந்த வியாபாரத்தில் இந்நாடுகளிலிருந்து இந்தியாவுக்குப் போட்டி ஏற்பட்டிருக்கிறது; விலைகளும் குறைந்திருக்கின்றன ஆகையால், இந்திய சர்க்கார், கருமிளகு மீது விதிக்கப்பட்ட ஏற்றுமதி வரியை எடுத்துவிட்டனர்.

1954—55ல் ஏற்றுமதி செய்யப்பட்ட மிளகின் மதிப்பு ரூ ஏழு கோடியாகும்; 1952—53ல ஏற்றுமதி செய்யப்பட்ட மிளகின் மதிப்பு ரூ. 16 கோடிக்குச் சற்று அதிகம்; இவ்வருடம் ஏற்றுமதி அளவு கொஞ்சம் அதிகம்.

முந்திரிக்கொட்டைகள் எவ்வளவு கிடைக்குமோ அவ்வளவுக்கு முந்திரிப் பருப்புகள் ஏற்றுமதி செய்யக்கூடிய அனுகூலமான நிலையில் இப்பகுதிகள் இருக்கின்றன. முந்திரி சாகுபடியை அதிகரிக்க சகலவிதமான முயற்சிகளும் செய்யப்பட்டுவருகின்றன. 1954-55-ம் வருடத்தில் முந்திரி பருப்பு ஏற்றுமதியின் மதிப்பு ரூ. 10 51 கோடி எனக் கணக்கிடப்பட்டிருக்கிறது; ஆனால் 1952—53-ல் இதைவிட அதிக அளவு ஏற்றுமதி செய்யப்பட்டபோதிலுங்கூட, ஏற்றுமதி மதிப்புக் கிட்டத்தட்ட ரூ.13கோடிதான். 1655-56-ம் வருட முதல் கால் வருடத்தில் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ள முந்திரிப் பருப்பின் மதிப்பு ரூ 3 37 கோடியெனக் கணக்கிடப்பட்டிருக்கிறது.

அமைதிக்கும்—வாழ்வுக்கும் அரும் பணியாற்ற தோன்றிய உலகமன்றம்

அக். 24: ஐ. நா. நிறுவனம் உருவாகிய நாள்

"ஐ. நா-வின் பணி, உலக முழுவதிலுமுள்ள எண்ணிறந்த மக்களின் வீடுகளிலும், வாழ்க்கையிலும் விளங்குகிறது. எழுதப் படிக்கத் தெரியாதவர்கள் எழுதப் படிக்கக் கற்றிருக்கிறார்கள்; நோயால் கண்பார்வை இழந்தவர்கள் பார்வை பெற்றிருக்கிறார்கள்; பசியாயிருந்தவர்கள் உணவு பெற்றிருக்கிறார்கள்; பழங்காலத்து விவசாய முறைகளைக் கையாண்டு பயிர் செய்து வறுமைப்பட்டிருந்த விவசாயிகள் விளைவு தரும் புதிய முறைகளைப் படித்திருக்கிறார்கள்," என்று கூறப்படுகிறது.

1945, அக்டோபர் 24-ந் தேதி, ஐம்பது நாடுகள் ஒன்று கூடி உறுதி செய்து அமைத்த அந்த உலக மன்றம் ஐக்கிய நாடுகள் நிறுவனம். இந்த வாரம், அதன் 10-வது ஆண்டு நிறைவு விழா கொண்டாடப்படுகிறது.

மக்கள் உறவில் ஒரு புதிய நிலை தோன்றிய நாள், அந்நாள் உலக முழுவதும் உள்ள மக்கள் ஒன்றுகூடிப் பேசித் தங்கள் வேற்றுமைகளைச் சமாதானமாய்த் தீர்த்துக்கொள்வதற்கு ஒரு பொது மன்றம் நிறுவத் துணிந்த நாள் அந்நாள். ஐ. நா.-வின் முன்னுரை அறிவிப்பதே போல், 'வருங்காலத்தில் வாழும் மக்களை யுத்தத்தின் கொடுமைகளினின்று தப்புவிக்கவும், அதிக மான சுதந்திரம் உள்ள நிலைமையில் சமூக முன்னேற்றமும், வாழ்க்கைத்தர உயர்வும் ஏற்படச் செய்யவும்' அவர்கள் உறுதி மேற்கொண்டார்கள்.

நியாயம், நீதி என்பவற்றையே முதன்மையான அடிப்படையாகக் கொண்ட ஒழுங்கு நெறிபட்ட உலகத்தைக் காணவேண்டுமென்பது மக்களது நம்பிக்கை; அது கைகூடுவதற்கு ஐ. நா. இடைவிடாமல் உழைத்துள்ளது என்றும் கூறப்படுகிறது.

மனமுவந்து ஒத்துழைத்து, சமாதானம் நிலவுவதற்கு அமைத்த மிகச் சிறந்த கருவிதான் ஐ நா மன்றம்.

கெடுபிடிப்போர், ஆக்கிரமிப்பு அரசியல் கொந்தளிப்பு ஆகியவை இந்த உலக மன்றத்தை இந்தப் பத்தாண்டுகளில் அசைத்துவிடவில்லை.

உலகத்தில் சமூகத் துறை, பொருளியல், சுகாதாரம், கல்வி ஆகியவற்றில் பெரிய மாறுதல்கள் ஏற்பட்டதை ஐ. நா. கண்டிருக்கிறது.

கிரீஸ், காஷ்மீர், பாலஸ்தீனம், இந்தோனேஷியா, இந்தோ-சீனா ஆகியவற்றின் எல்லைகளில் போர் மூளாதவாறு அது தடுத்துள்ளது; எனவே, ஐந்து யுத்தங்கள் தவிர்க்கப்பட்டுள்ளன. கொரியாவில் போர் ஏற்பட்டபொழுது, ஐ நா. தன் கடனாற்றத் தவறவில்லை.

60 கோடி மக்கள், காலனி ஆதிக்கத்தினின்று அரசியல் விடுதலை பெறுவதற்கு அது மறைமுகமாக உதவி செய்திருக்கிறது.

உலக சமாதானத்தை நிலை நிறுத்த ஐ நா தன் கடமையைச் செய்வதுமல்லாமல், 10 விசேட நிறுவனங்கள் மூலமாய் மனித வர்க்கத்தின் நலனைப் பேணவும் அது பணியாற்றுகின்றது.

உலக சுகாதார நிறுவனமும், குழந்தைகள் நிதியும், சுகாதார விருத்திக்காக உழைக்கின்றன.

யுத்தத்திற்குரிய அணு சக்தியை சமாதானத்துக்கு உரியதாக்க ஐ. நா-வில்தான் முதல் முயற்சி ஆரம்பமாயிற்று.

உணவு, விவசாய நிறுவனம் பசியைப் போக்க முயல்கிறது.

கல்வி—விஞ்ஞானக கலாச்சார நிறுவனம் எழுத்தறிவின்மையையும், அறியாமையையும் அகற்ற நாடுகின்றது

சர்வதேசத் தொழிற் சங்கம் சமூக நீதியை நிலை நாட்டத் தொண்டாற்றுகிறது.

சர்வதேசச் செலாவணி நிதி, உலக பாங்கி, சர்வதேசச் சிவில் விமானப் போக்குவரத்து, சர்வதேசத் தந்தி யூனியன், உலக அளவைகள் நிறுவனம் என்பவை, அதனைச் சார்ந்த மற்ற நிறுவனங்களாகும்.

பிற்பட்ட நாடுகளுக்காக ஐ. நா. வகுத்துள்ள தொழில் நுட்ப உதவித் திட்டம் இருபதாம் நூற்றாண்டின் மத்தியில் வகுக்கப்பட்டுள்ள திட்டம்—என்றெல்லாம் ஐ. நா. புகழப்படுகிறது.

நாகரீகத்தின் நலன்களை உலக முழுவதற்கும் பயன்படுத்த முடியும் என்று மனிதன் துணிந்த காலம், சரித்திரத்தில் இதுவே யாகும்.

என்று புகழ்பெற்ற பிரிட்டிஷ் சரித்திர ஆசிரியர் அர்னால்ட் டாயின்பீ சொல்லியிருக்கிறார்.

பிறப்பு விகிதத்திற்கு ஏற்ப உணவு உற்பத்தி இல்லையாம்!

சிங்கப்பூர், அக். 18—

கொழும்புத் திட்டத்திற்கு உட்பட்ட பகுதிகளில், ஆண்டு தோறும் 80 இலட்சம் பேர் வீதம் மக்கள் தொகை அதிகரித்து வருகிறதென்றும், அதே நேரத்தில் சென்ற ஆண்டில் (1953—54) எட்டிய உணவு உற்பத்தியின் உச்சநிலையைவிட இந்த ஆண்டின் (1954—55) உணவு உற்பத்தி நிலை, குறைந்து விட்டதாகவும் தெரிகிறது.

அந்தப் பகுதிகளில், சாகுபடிக்குத் தேவையான 'பருவங்'கள் அனுகூலமாகவும், உதவி நிதி கிடைத்து வந்துங்கூட மக்கள் தொகைப் பெருக்கத்தின் 'வேகத்'திற்கேற்றாற் போன்று உணவுத் தானிய வகைகளின் உற்பத்தியின் 'வேகமும்' அமையவில்லை. இத்துடன், அப்பகுதிகளில் இன்னும் அதிகமாக சுகாதார வசதிகள் ஏற்பட்டால், மக்கள் தொகை அதிகமாகிக் கொண்டே செல்லும்.

மேற்கூறப்பட்ட இந்தத் தகவல்களும், கருத்தும், கொழும்புத் திட்ட ஆலோசனைக் கூட்டம் ஒன்றில் தெரியப்படுத்தப் பட்டுள்ளது.

இந்தியா உட்பட 17 கொழும்புத் திட்ட நாடுகள் மாநாடு கூடி கொழும்புத் திட்ட நடைமுறைகள் குறித்து ஆலோசனை செய்து வருவதாகத் தெரியவருகிறது.

அம்மாநாட்டின்போது, திட்ட நாடுகளைச் சேர்ந்த அமைச்சர்களின் ஆலோசனைக்கென்று தரப்பட்ட ஒரு அறிக்கையில், ஆசிய நாட்டவர் கடந்த போருக்கு முன்பு தாங்கள் உட்கொண்ட உணவைவிட இப்போது குறைவாகவே உணவு எடுத்துக்கொள்கின்றனர் என்று கூறப்பட்டிருந்ததாம்!

கொழும்புத் திட்டத்திற்காகப் பிரிட்டன் ஒதுக்கவிருக்கின்ற தொகையில் பெரும் பகுதியும் காமன்வெல்த் நாடுகளுக்கேதான் செலவிடப்படும் என்றாலும், காமன்வெல்த் அல்லாத பிற நாடுகளுக்கும் பிரிட்டனின் உதவி கிடைக்கும் என்றும் தெரியப்படுத்தப் பட்டிருக்கிறது.

'நெய்வேலியில் பெரும் தொழில்கள் ஏற்படும்'

கொழும்புத் திட்டத்துக்காக 1956 ஏப்ரல் முதல் 7 ஆண்டுகளில் 70 இலட்சம் பவுன் (சுமார் ரூ. 9½ கோடி) செலவிடுவதற்கு பிரிட்டன் உத்தேசித்திருப்பதாக பிரிட்டன் பிரதிநிதி தெரிவித்திருக்கிறார்.

மேலும் திட்டத்தின் முதல் ஆறு ஆண்டுக் காலத்திற்கு, செலவிட 28 இலட்சம் பவுன் ஒதுக்கப்பட்டிருப்பதாகவும், அதில், 1955 ஏப்ரல் முடிவுக்குள்ளாக 19 இலட்சம் பவுன் செலவிடப்பட்டிருக்கலாம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இது தவிர, இந்திய சர்க்காருக்கு, இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் ஒரு பெரிய எஃகு ஆலை ஏற்படுத்துவதற்கான யோசனைகள் கூற இரண்டு பிரிட்டிஷ் நிபுணர்களை பிரிட்டன் அனுப்பியிருப்பதாகவும், சென்னை மாநிலத்தில் தென் ஆற்காடு மாவட்டத்தைச் சேர்ந்த நெய்வேலி பகுதியில் பழுப்பு நிலக்கரியைத் தோண்டி எடுப்பதற்கான சாத்தியக்கூறுகள் பற்றிய ஆராய்ச்சிக்குப் பிரிட்டனும் ஒத்துழைப்புத் தருவதாகவும் அவர் தெரிவித்திருக்கிறார்.

'இந்த ஆராய்ச்சியின் விளைவாக, நெய்வேலி பகுதியிலிருந்து பழுப்பு நிலக்கரி தோண்டி எடுக்கப்படுவதானல், அப்பகுதியில் பெரும் பெரும் தொழில்களை ஆரம்பிப்பதற்கு ஒரு மூலாதாரம் ஏற்படும்,'

என்று, பிரிட்டிஷ் குழுவைச் சேர்ந்த பாய்ல் என்பார், கொழும்புத் திட்டத்தின் கீழ் பிரிட்டன் இந்தியாவிற்குச் செய்துள்ள இரண்டு உதவிகளைச் சுட்டிக் காட்டிப் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

இப்படியும் ஒரு நிலைமையா?

போர்ச்சுகீசியக் காலனியில் உள்ள ஆங்கிலப் பள்ளிகளை, பாகிஸ்தான் பல்கலைக் கழகத்துடன் இணைக்கும் பிரச்சினை பற்றி பாக். அதிகாரிகளுடன் கோவா சர்க்கார் பேச்சுவார்த்தைகள் நடத்திவருகின்றனர் என்று தெரியவருகிறது

பாகிஸ்தான் பல்கலைக் கழக 'மெட்ரிகுலேஷன்' பரீட்சையை கோவா மாணவர்கள் எழுதுவதற்குப் போர்ச்சுகீசிய நிர்வாகம் ஏற்பாடு செய்து வருகிறது. இதனால் இனிமேல் இந்தியப் பல்கலைக் கழகங்களை கோவா சார்ந்திருக்க வேண்டியிராது.

கவர்னரின் அச்சம்!

"நவ நாகரீகப் பெண்மணிகள், ஆடையிலும் நடையிலும் ஆண்களைப் பின்பற்றுவது, ஆண்-பெண் சரிநிகர் சமானமாகாது; ஆண்களுடன் பெண்கள் போட்டியிடுவதைப் பார்த்தால், இன்னும் சில ஆண்டுகளில் ஆண்களின் கதி என்னவாகும் என்பதை நினைப்பதற்கே எனக்கு அச்சமாக இருக்கிறது; இந்த நிலையிலேயே எனக்குப் பிறகு, சென்னைக்குப் பெண் கவர்னர் ஒருவர் வந்துவிடவும் நேரிடும்," என்று, கவர்னர் பிரகாசா, சென்னை கிறித்துவப் பெண்கள் கல்லூரியில் பேசுகையில் குறிப்பிட்டுள்ளார்.

பெண்களின் சக்தியைப் பிழிந்தெடுக்கிறதாம்!

"பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் படிக்கும் பெண்களுக்குப் பரீட்சைகள் ஏற்படுத்தும் முறைகளை எடுத்துவிட வேண்டும்; பெண்களின் சக்தியைப் பிழிந்தெடுப்பனவாகவே பரீட்சைகள் உள்ளன; கல்வி அறிவுக்குப் பரீட்சை அவசியமே இல்லை," என்று கவர்னர் பிரகாசா, சென்னை கிறித்துவப் பெண்கள் கல்லூரியின் 40-வது ஆண்டு விழாவில் பேசுகையில் குறிப்பிட்டுள்ளார்.

சி.பி. சிற்றரசு சொற்பொழிவு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அவனது வரலாறு நமக்கு எடுத்துக் கூறுகிறது. அப்படிப்பட்ட முசோலினிதான் இத்தாலியையே தனது சர்வாதிகாரப்பிடியில் 25 ஆண்டுக் காலமாக வைத்திருந்தான் என்றால், அது அவனது அறிவுத் திறன்பாற்பட்ட ஒன்று என்பதையும் எவரும் மறுக்க முடியாது தான். அதுபோலவேதான், நமது தமிழகத்திலே தலைசிறந்த தலைவர்—எல்லோராலும் போற்றிப் புகழப்பட்ட தலைவர் திரு. வி. க. அவர்களும் ஆடம்பரமற்ற எளிய வாழ்க்கையைத்தான் மேற்கொண்டிருந்தார். அவர்களைப் போன்றுதான் இன்று நம்மிடையே ஒரு பொதுச் சொத்து இருக்கிறது; அந்தப் பொதுச் சொத்துதான் அண்ணு அவர்கள்; அண்ணு அவர்களும், திராவிடத்தின் தனிப்பெருந் தலைவராக இருந்துங்கூட எளிய வாழ்க்கையையேதான் மேற்கொண்டிருக்கிறார்."

—இவ்வாறு, சென்னை சிந்தாதிரிப்பேட்டை குருவப்பச் செட்டித் தெருவில், தோழர் அ. பொ. அரசு தலைமையில் நடைபெற்ற பொதுக்கூட்டம் ஒன்றில் அண்ணு அவர்களது உருவப்படத்தைத் திறந்துவைத்து தோழர் சி. பி. சிற்றரசு பேசுகையில் குறிப்பிட்டார்.

சிந்திப்பதில்லை — ஆனால் சந்தேகிக்கின்றனர்!

தோழர் சி. பி. சிற்றரசு அவர்கள் தொடர்ந்து பேசியதாவது:—

"இன்றைய நமது நாட்டில் ஏழை ஒருவன் ஏதாவது நல்ல கருத்தைச் சொன்னாலும் கூட அந்த நல்ல கருத்தைச் சந்தேகக் கண் கொண்டுதான்பார்க்கின்றனர் அந்தக் கருத்தை மனதில்கொண்டு அதற்கான வியாக்கியானம் என்ன என்பது பற்றிச் சிறிதளவும் சிந்திப்பதே கிடையாது. ஆனால், அந்த நிலையை மாற்றி, யார் எது சொன்னாலும் அதனை நன்றாகச் சிந்தித்து, தங்கள் சிந்தனையின்பாற்பட்ட வழியில் செயலாற்ற முனையத் தூண்டிய பெரும் மதிப்பு அண்ணு அவர்களையேதான் சாரும். மாணவர்கள்—இளைஞர்களுடைய உள்ளங்களை ஈர்த்து, அவர்களை நம் பாசறைக்கு அழைத்துவரச் செய்த ஆற்றல் அண்ணுவைத்தான் சாரும்.

தவறான 'வாளு'டன் சமுதாயம் விளையாடுவதா?

"இன்றைய மனித சமுதாயம் சாதாரண ஒரு குழந்தைப் பருவ நிலையில்தான் இருக்கிறது. குழந்தை ஒன்று தனது கையிலே கத்தி வைத்திருப்பதை நாம் பார்க்கிறோம்; அந்தக் கத்தியை வைத்துக்கொண்டு விளையாடுவதால் குழந்தைக்குத் தான் ஆபத்து என்பதை நாம் உணருகிறோம்—ஆனால், அந்தக் குழந்தை உணராது; அப்படிப்பட்ட நேரத்திலே, நாம், குழந்தையின் கையிலிருக்கும் கத்தியை வாங்கி வீசி எறிய வேண்டியவர்களாகிறோம். அப்படி அக்குழந்தையிடமிருந்து கத்தியை நாம் வாங்கிக் கொள்வதாக இருந்தால், குழந்தை வீறிட்டு அழுகிறது. அழுகின்ற குழந்தையைச் சமாதானப் படுத்த வேண்டுமானால், அந்தக் கத்திக்குப் பதிலாக—அபாயத்தைத் தரும் ஆயுதத்திற்குப் பதில் வேறு ஏதாவதொரு பொருள் தருகிறோம்—குழந்தையும் கத்தி போனதை மறந்து, நாம் தரும் வேறு பொருளை வாங்கிக்கொண்டு அழுகையை நிறுத்துகிறது. அக் குழந்தைப் பருவத்திலேயே இருக்கும் இன்றைய சமுதாயத்திடமும் தவறான கருத்துக்கள் என்ற வாள் இருக்கிறது. அந்த வாளை வைத்துக்கொண்டு சமுதாயம் விளையாடுகிறது; ஆனால், அந்த வாளோ, சமுதாயத்தைக் கொஞ்சம் கொஞ்சமாக அறுத்து அபாயத்தை விளைவித்துக் கொண்டே இருக்கிறது. சமுதாயத்திற்கு ஆபத்து தருகின்ற வாள் போன்ற அந்த தவறான கருத்துக்களை மக்கள் மனத்தினின்றும் அகற்றி, அதனைத் தவிர்க்க வேறொரு நல்லனபயக்கும் நற்கருத்துக்களைக் கொடுக்க வேண்டும் என்ற தத்துவத்தைத் தான் திராவிட முன்னேற்றக் கழகம் கொண்டிருக்கிறது. அந்தத் தத்துவம் ஆளும் கட்சியாகிய காங்கிரசிடமோ, அல்லது வேறெந்த கட்சியிடமோ இல்லை. சமுதாயத்தைச் சீர்குலைக்கும் வாள் போன்ற அந்தத் தவறான கருத்துக்களை அகற்றுகிறோம் என்பதாகக் கூறிக்கொண்டு, சமுதாயம் எனும் அக்குழந்தை அழ அழ, பலவந்தமாக அந்த வாளைப் பிடுங்குகின்றனர்—அதனை இழந்து வேறொரு நல்ல பொருளுடன் விளையாட விடாதபடி! எனவேதான், திராவிட முன்னேற்றக் கழகம் மட்டுமே மக்களது உள்ளத்தைச் சரிவர நன்றாகத் தெரிந்து கொண்டுள்ளது என்கிறோம். அந்த இயக்கத்தின் முன்னேடியாக முன் வரிசையிலே நின்று கொண்டிருப்பவர்தான் நமது அண்ணு அவர்களாகும்.

'அறிவை' அலட்சியம் செய்யும் போக்கு!

மேல்நாடுகளிலெல்லாம் 'அறிவு தேவை, அறிவு தேவை' என்று அலைகிறார்கள். நாட்டுக்குப் பொதுச் சொத்தான அந்த அறிவை, எங்கிருந்தாலும், எவரிடமிருந்தாலும் பெற்றுக்கொள்ள வேண்டுமென்று அலைகிறார்கள் ஆனால், இங்கோ, அந்த நிலை இல்லாதிருப்பதைக் காண்கிறோம் அறிவு வளருவதற்கான வழிவகைகள் என்னவென்று மேலைநாடுகளிலெல்லாம் துருவித் துருவிப் பார்க்கிறார்கள் அரசியல் துறையிலே எடுத்துக்கொண்டாலும்கூட; அறிஞன் ஒருவன் எதிர்க்கட்சிக்காரனாக இருந்தாலும் கூட, அவனைக் கேலி செய்வது கிடையாது ஆனால், இங்கோ......எல்லாமே தலைமாற்றமாக இருப்பதைத்தான் நாம் இன்றைய நாட்களில் காண்கிறோம்.

விடுதலைப் பாதையை பின்பற்றி நடப்போம்!

"எனவே, இத்தகையான தவறான கருத்துக்களைத் தவிர்த்து நல்ல பாதையில் நாட்டு மக்களை நடத்திச் செல்ல அண்ணு போன்ற அறிஞர்கள்—பொதுச் சொத்துக்கள் நாட்டுக்கு மிக மிகத் தேவை நமது நாட்டின் விடுதலைக்காக—நாட்டு மக்களின் அறியாமையை நீக்க அறிவுடைமையைப் பரப்பும் வழியில்—போராட்டப் பாதையில், அண்ணு அவர்களின் அடிச்சுவட்டைப் பின்பற்ற நாம் அனைவரும் ஒன்றுபடவேண்டும். பயங்கரமான பாதை வழியே நம்மை அழைத்துச் செல்லமாட்டார் என்ற உறுதியான நம்பிக்கையுடன், நமது நாட்டின் நலனில் அக்கறை கொண்டவர்களாக அண்ணு அவர்களின் விடுதலைப் பாதையைப் பின்பற்றி நடக்க நாம் முன்வரவேண்டும்."

இருதார மணம்

சர்க்கார் ஊழியருக்குத் தடை

"முதல் மனைவி உயிருடனிருக்கையில், சர்க்காரின் அனுமதியின்றி, மற்றொரு பெண்ணை சர்க்கார் ஊழியர்கள் மணம் செய்து கொள்ளக்கூடாது," என்று, மைசூர் சர்க்கார் ஊழியர்களுக்குத் தடைவிதிக்கப்பட்டிருக்கிறது.

பி. பாலசுப்பிரமணியம்

'சண்டே அப்சர்வர்' ஆங்கில வார இதழ் ஆசிரியர் தோழர் பி. பாலசுப்பிரமணியம் இருதயக் கோளாறின் காரணமாக சென்னை ஜெனரல் ஆஸ்பத்திரியில், 38-ம் எண்ணுள்ள தனி பிரிவில் 9-ம் எண் அறையில் அனுமதிக்கப்பட்டு, சிகிச்சை பெற்று வருகிறார். டாக்டர் மாசிலாமணி அவர்களின் மேற்பார்வையில் சிகிச்சையளிக்கப் படுகிறது.

கரூர் தி. மு. கழகச் செயற்குழு உறுப்பினர்கட்கு

23—10—55 மாலை 4 மணிக்கு, கழக அலுவலகத்தில், கிளைக் கழகச் செயற்குழு உறுப்பினர்கள் கூட்டம் நடைபெறும்

மதுரை—இலட்சுமிபுரம்

முந்து படிப்பக 3-வது ஆண்டு விழா சந்தைத்திடலில் பொதுக்கூட்டம் 23—10—55 மாலை 6 மணிக்கு

தலைவர்: ஏ. அருணாசலம்

பேசுபவர்: சி. என். அண்ணாதுரை

சுகாதார வார விழா

சென்னை—சூளை நகர இளைஞர் கழகச் சார்பில், 11-ம் ஆண்டு சுகாதார வார விழாவையொட்டி, 23—10—55 காலை 8 மணிக்கு, கழக மனையிலிருந்து தோழர் தீ. வீ. இராமச்சந்திரன் தலைமையில் சுகாதார ஊர்வலம் நடைபெறும். மாலை 3 மணிக்கு இந்து யூனியன் கமிட்டி ஆரம்பப் பள்ளியில் குழந்தைகளின் விளையாட்டுப் போட்டி நடைபெறும். தோழர் ஏ. பி பாலசுப்பிரமணியம் பரிசு வழங்குவார்.

திருமணங்கள்

25—10—55 காலை 8 மணிக்கு, தேவாரம் தி மு. கழகத் தோழர் ச. முத்துக்கிருஷ்ணன்—தோழியர் அங்கம்மாள் திருமணம், மணமகன் இல்லத்தில், அண்ணாதுரை அவர்கள் தலைமையில் நடைபெறும்.

* * *

24—10—55 திங்கள் மாலை 6 மணிக்கு, சூளை குமாரசாமி ராசபுரத்தில் தோழர் எம். துரைக்கண்ணனார் தலைமையில், தோழர்கள் எம். ஈ. கோவிந்தராசன், மா. சண்முகன் ஆகியோர் பேசுவர்.

வடநாட்டில் மூக்குக்......

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

விரிவாக்கப்படலாம் என்று கூறப்படுகிறது

இந்தியாவின் தேவை ஆண்டொன்றுக்கு 20 முதல் 25 டன் வரை என்று கூறப்படுகிறது. இதுவரை இந்த மூக்குக் கண்ணாடிகள் இறக்குமதி பொருள்களாக இருந்து வருகின்றன.

★

நிகழ்ச்சிகள்

21—10—55 மாலை 6½ மணி அளவில், சென்னை சிந்தாதிரிப் பேட்டை குருவப்பச் செட்டித் தெருவில், கலைக் கதிர் கழகச் சார்பில் ஒரு பொதுக் கூட்டம் நடைபெற்றது.

கூட்டத்திற்கு சென்னை நகர சபை உறுப்பினர் தோழர் அ. பொ. அரசு தலைமை வகித்தார்.

கூட்டத் துவக்கத்தில் தோழர்கள் சிலர் இயக்கப் பாடல்கள் பாடினார்.

தோழர் சுரதா அவர்கள், தமிழ்ப் பெரியார் திரு வி. க. அவர்களின் உருவப் படத்தைத் திறந்து வைத்துச் சொற்பொழிவாற்றினார்

பின்னர், தோழர் சி. பி சிற்றரசு அவர்கள், அண்ணு அவர்களது உருவப் படத்தைத் திறந்து வைத்து, அண்ணு அவர்களது ஆற்றல், அறிவுத் திறன் ஆகியவை குறித்து அரியதோர் கருத்துரை—நகைச் சுவை ததும்ப ஆற்றினார்.

கூட்டத்திற்கு பெருந்திரளான மக்கள் திரண்டிருந்தனர். இறுதியில் நன்றியுரை முடிவுடன் கூட்டம் முடிவுற்றது. (ந. ஙி)

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று. (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம் சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன். எம் ஏ.